REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 18உ வியாழன் (31—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 19உ வெள்ளி (1—4—55) [இதழ் 247

ஆராய்வதில்தான் இருக்கிறார்கள்!

"தென்னிந்தியாவில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை, பரிட்சார்த்தத் தொழிற்சாலை ஒன்றில் எஃகு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்த சாத்தியப்படுமா என்பது பற்றி சர்க்கார் பரிசிலனை செய்து வருகிறது," என்று மக்கள் சபையில் அமைச்சர் கே. சி. ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

அப்பரிட்சார்த்தத் தொழிற்சாலையில், எஃகு உற்பத்தி செய்வதில் 'கோக்' கரிக்குப் பதிலாக, அந்தப் பழுப்பு நிலக்கரியை உபயோகப்படுத்த முடியுமா என்பதை இனி பரிட்சை செய்துதான் பார்க்க வேண்டுமென இந்திய சர்க்காருக்கு நிபுணர்கள் யோசனை கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மாமரத்துக்கடியில் சிவலிங்கத்திற்கு நர பலி

லிங்கத்திற்குமுன்னே வெள்ளுடை பூண்ட மாதின் முண்டம்

எரிந்த சூடம்-உடைபட்ட தேங்காய்-தீய்ந்த ஊதுவத்தி-பூவுடன் பூக்குடல்!

சிவ பக்தர்களின் கொலைத் திருவிளையாடல்

பூனு, மார்ச் 29—

போலீஸ் தேடுகிறது, சிவலிங்கத்திற்கு நர பலி கொடுத்த சிவ பக்தர்களை! முப்பது வயதுடைய ஒருத்தியை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று, பூனுவுக்கு இருபது கல் தொலைவில் உள்ள காட்டில், சிவலிங்கத்திற்கு நர பலி இட்டுள்ளனர் 'வடநாட்டு பைராகிகள்'!

பெரியபுராணத்து சிறுத்தொண்டரை பிள்ளைக் கறி கேட்ட 'பைராகிகள்' சந்ததியினர் போலும், மேற்படி நர பலி கொடுத்த சிவ நெறியினர்!

காட்டில் உள்ள ஒரு மாமரத்தின் அடியில், மகேஸ்வரனுக்கு இந்த நர பலி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அங்கு வைக்கப்பட்டிருந்த சிவலிங்கமும், அருகிலிருந்தக் கோவில் ஒன்றிலிருந்து, சிவ கொலை நெறிச் செல்வர்களால் களவாடப்பட்டதாக இருக்கக் கூடும் என போலீஸ் கருதுகிறது.

பலியிடப்படுவதற்கு முன்னர், அப்பெண் கட்டிக்கொண்டிருந்த பச்சை நிறச் சேலை, அம்மாமரத்தை சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. ஒரு வெள்ளை வேட்டியும், ரவிக்கையும் போட்டுக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறாள் அப் பெண்மணி!

கூப்பிய கரத்துடன் அவள் முண்டம், சிவலிங்கத்திற்கு முன்னால் தரையில் கிடப்பதைக் கண்ட போலீஸ், 'சிவலிங்கத்தை வணங்கும்பொழுது, கண்டக் கோடரி கொண்டு அவள் தலை பின்புறத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும்,' என நம்புகிறது.

அவளுடைய முண்டத்திற்கு அருகில் எரிந்த சூடமும், உடைத்த தேங்காயும், தீய்ந்த ஊது வத்தியும், பூவுடன் கூடிய பூக்குடலும் இருக்கக் கண்டனர் போலீசார்.

சிவநெறிக் கொலைஞரைக் கண்டு பிடிப்பதில் தீவிரம் காட்டுகிறது போலீஸ்!

ஊருக்கு உபதேசம்

"ஒவ்வொருவரும் மாதத்திற்கு ரூ 250-க்கு மேல் செலவிடக் கூடாது என்று தான் பிறருக்கு உபதேசம் செய்தபோதிலும், தன்னால், அந்த உபதேசமொழிகளைப் பின்பற்ற முடியவில்லை," என்று, காங்கிரஸ் தலைவர் தேபர் கூறியிருக்கிறார்.

"கடந்த இருபதாண்டு காலமாக நானும் என்வாழ்க்கையைச் சீர் திருத்தி அமைக்க முயற்சிக்கிறேன்; ஆனால் எனது செலவை மாதந்தோறும் ரூ. 250 என்ற அளவுக்குக் குறைத்துக் கொள்ள முடியவில்லை," என்றும் அவர் கூறினாராம்.

மட்சு தீவை செஞ்சீன தாக்குமா?

1,10,000 படையினர் அணிவகுப்பா?

சீனக் கரையோரத் தீவான மட்சுவை சீனக் கம்யூனிஸ்டுகள் சீக்கிரமே தாக்கக்கூடும் என்று மட்சுவில் உள்ள சியாங் சர்க்கார் தளபதி கூறியுள்ளாராம்.

எதிர்க்கரையில், 1,10,000 - கம்யூனிஸ்டு துருப்புகள் இருப்பதாக அவர் கூறினார்.

யுத்த அபாயம் எப்போதும்உண்டாம்!

யுத்தம் வருமா, — எப்போது வரும் என்று கூறுவதற்கில்லை என்றும், எனினும் யுத்த அபாயம் எப்போதும் உண்டு என்றும், நாம் கவனமாக இருக்க வேண்டும் என்றும் ஐசனோவர் பத்திரிகையாளரிடை குறிப்பிட்டாராம்.

'லாட்டரி' ஆரம்பிக்க அனுமதி

மூன்று மாநிலங்கள் கோரினவாம்

'லாட்டரி'கள் ஆரம்பிப்பதற்கென 3 மாநில சர்க்கார்கள் அனுமதி கோரியபோது, அவற்றின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன என்று டெல்லி மேல்சபையில் கூறப்பட்டுள்ளது.

டெல்லியின் போக்கிற்கு மைசூர் சர்க்கார் எதிர்ப்பு!

ரூ. 500-க்கு மேல் சம்பளம் பெறும் அதிகாரிகள் அலவன்ஸ் ரத்து!

மைசூர் மாநிலத்தில் ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்குபவர்களின் அகவிலை, கிராக்கிப்படி, சொந்த அலவன்ஸ் முதலியனவற்றை நாளை முதல் தராது நிறுத்திவிட சர்க்கார் முடிவு செய்திருப்பதாக சட்டசபையில் முதல் மந்திரி அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

அகில இந்திய உத்தியோகங்களான ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் சம்பளம் காங்கிரஸ் தீர்மானித்திருக்கும் சோஷியலிசம் மாதிரி சமூக அமைப்புக்கு ஒத்ததல்ல என்றும், மைசூர் மாநிலத்தில் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளின் அதிக பட்ச சம்பளம் ரூ. 1,850 என்றும், இதை ரூ. 1,500 ஆகக் குறைக்கலாம் என்றும் அனுமந்தையா கூறியிருக்கிறார்.

மைசூர் மாநிலத்தில் ரூ. 2,500ம் அதற்கு மேலும் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் வர்க்கத்தை உருவாக்கலாம் என்று மத்திய சர்க்கார் கூறிய யோசனையை மைசூர் அரசாங்கம் ஏற்கவில்லை என்றும் அனுமந்தையா சட்டசபையில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

உணவு தானிய விலைகள் இறங்கியுள்ளது காரணமாக, மாநிலத்தில் வாழ்க்கைச் செலவு 40 புள்ளிகள் குறைந்துவிட்டது என்றும், எனவே யுத்த காலத்தில் கொடுக்கப்பட்டு வந்த கிராக்கிப்படியை இன்னும் நீடிக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்த கிராக்கிப்படி கொடுப்பது நிறுத்தப்படுவேதினால், 10 முதல் 15 லட்சம் ரூபாய் வரை மிச்சப்படும் என்றும் முதல் மந்திரி கூறியிருக்கிறார்.

கொள்ளை வியாபாரம் நடக்காது—கொழுத்த இலாபம் கிடைக்காது!

வியட்மின் ஆட்சியில் வியாபாரிகள் ஓட்டம்!

ஹைபாங் (வடகிழக்கு வியட்நாம்), மார்ச் 30—

வளமான தொழில் மிகுந்த துறைமுக நகரான இந்த ஊரை விட்டு, மே மாதத் துவக்கத்தில். 45-ல் 40 இந்திய வியாபாரிகள் தங்கள் கடைகளை மூடிவிட்டு வெளியேறிவிட எண்ணியுள்ளனர் எனத் தெரிகிறது.

இதற்குக் காரணம் வரும் மே 19-ந் தேதி முதல் இந்தத் துறைமுகத்தை வியட்மின் சர்க்கார் மேற்கொள்ளுகிறது என்பதே யாகும்.

(ஜினிவா ஒப்பந்தப்படி, பிரெஞ்சு சர்க்கார் அத்தேதியிலிருந்து அந்த துறைமுகத்தை வியட்மின் வசம் ஒப்புவிக்கவேண்டும்.)

"வியாபார நிலை, பிரெஞ்சு ஆட்சியிலிருந்ததற்கு நேர்மாறாக வியட்மின் ஆட்சியிலிருக்கும்," என்று, வெளியேறும் அந்த வியாபாரிகள் கூறுகின்றனர்.

பிரெஞ்சு ஆட்சியின் கீழ், நல்ல வியாபாரமும், கொழுத்த இலாபமும் கிடைத்துவந்ததாம்; ஆனால் வியட்மின் ஆட்சியோ, கறார் விலை —ஆனால் குறைந்த விலையுடன் பொருள்களை விற்கக்கூடிய கூட்டுறவுக் கடைகளை நிறுவுமென்றும், பொதுவாகவே மக்கள் அத்தகைய கடைகளில் தான் பொருள்கள் வாங்குவர் என்றும், எனவே, தங்கள் வியாபாரம் செழிக்க முடியாது என்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

இந்தியாவில், வியாபார நிமித்தமாக வேலை செய்துவரும் தறிகளின் மொத்த எண்ணிக்கை 12 லட்சமாகும்.

இந்திய சர்க்கார், தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், 1954 செப்டம்பர் மாதம் வரை ரூ. 1.24 கோடி செலவழித்துள்ளது.

கம்யூனிஸ்டு தங்கமணி தாக்கப்பட்டார்!

கம்யூனிஸ்டு தொழிலாளர்களே தாக்கினராம்!

தூத்துக்குடி, மார்ச் 26—

பிரபல கம்யூனிஸ்டும், தொழிற்சங்கத் தலைவருமான மதுரை கே. டி. கே. தங்கமணி, மற்றும் திருநெல்வேலி நல்லசிவனும் கடந்த 22-ந் தேதியன்று இரவு 8-30 மணி இரயிலில் தூத்துக்குடிக்கு வந்து, ஆலைத் தொழிலாளர் சங்கச். செயலாளரான எம். வெங்கடகிருஷ்ணன் வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில், சேதுராஜாகு தெருவில், கம்யூனிஸ்டு கட்சியினர் என்றும், பழி வாங்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிற நான்கு ஆலைத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

இந்த இரு தொழிற்சங்கவாதிகளும் முன்னாளன்று, தூத்துக்குடிக்கு வந்து, 'ஹார்வி மில்' தொழிலாளர் 'போனஸ்' விஷயமாகக் கலந்து பேசினர் என்றும், அப்போது, பழிவாங்கப்பட்ட தொழிலாளரை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளச் செய்வது பற்றிக் கேட்கப்பட்டதாயும், போனஸ் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கும்போது அப்பிரச்சினையைச் சேர்த்துக் குழப்பவேண்டாம் என்றும், போனஸ் விஷயத்தில் ஒருமித்த கருத்து ஏற்பட்டால் அந்த ஒற்றுமை பலத்தைக் கொண்டே பழிவாங்கப்பட்டவர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும், தங்கமணியும், நல்லசிவனும் கூறினர்களாம்.

மறுநாள் அவர்கள் அம்பாசமுத்திரம் சென்றுவிட்டு, மீண்டும் தூத்துக்குடிக்கு வந்தபோது தான், பழிவாங்கப்பட்டவர்களான கம்யூனிஸ்டு தொழிலாளர்கள் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தலைவர்களை வரவேற்க கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் எவரும் இரயில் நிலையம் செல்லவில்லையாம்.

தாக்கப்பட்ட தலைவர்கள், பின்னர் வெங்கடகிருஷ்ணன் வீட்டிற்குச் சென்றுவிட்டு, கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்திற்கு வந்தார்களாம்.

அதற்குள் தலைவர்கள் தாக்கப்பட்ட விஷயம் கேட்டு கம்யூனிஸ்டு கட்சி முக்கியஸ்தர்கள் ஓடிவந்தனராம்.

அங்கு தங்கமணி அவர்கள் தாங்கள் தாக்கப்பட்டது பற்றிக்கூறி, பலாத்காரம் செய்து காரியங்களைச் சாதித்துவிடலாமென்று நினைப்பதைக் கண்டித்துக் கூறினாராம்.

கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் தங்கள் தலைவர்கள் தாக்கப்பட்டது கேட்டு ஆத்திரப்பட்டனராம்.

(ஒரு நிருபர்)

பாலம் வீழ்ந்து 6 பேர் பலி

ஐதராபாத், மார்ச் 30—

இந்த நகரிலிருக்கும் மூசி நதியின்மீதுள்ள பாலம் இன்று பிற்பகல் உடைந்ததின் விளைவாக 6 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 28 பேர் காயம்பட்டனர் என்றும் தெரிகிறது.

காயமடைந்தவர்களில் 5 பேர் நிலைமை ஆபத்தானதாயிருக்கிறது.

கவர்னர்-ஜெனரல் அலுவலகத்தைத் தகர்க்க!

எடுத்துக்கொண்ட முயற்சியில் தோல்வி!

பெல்காம், மார்ச் 30—

பஞ்சிம் எனும் இடத்திலிருக்கும் கோவா கவர்னர்-ஜெனரலின் அலுவலகத்தைத் தாக்கித் தகர்க்கும் நோக்குடன், குறித்த காலத்தில் வெடிக்கும் குண்டு ஒன்று, கவர்னர்-ஜெனரல் வழக்கமாக மாலையில் தனது அலுவல்களைக் கவனிக்க அமரும் அறையின் பின்புற வாயிலில் வைக்கப்பட்டிருந்ததாம்.

குண்டு வெடிப்பதற்கு மாறாக, புகைய ஆரம்பித்ததாம். அது அங்கிருந்த அதிகாரிகளின் கண்ணில் படவே அவர்கள் தக்க சமயத்தில் குண்டை அப்புறப் படுத்தினர் என்று தெரிகிறது. பின்னர் குண்டு, சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 31—3—'55 வியாழன்

அகதிகளாகப் பிறக்க வேண்டும்!

'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே மேல்' என்ருர் அவ்வையார். மனிதனுகப் பிறப்பதிலும், கூன், குருடு, ஊமை, செவிடு நீங்கிப் பிறப்பது மிகமிக மேலானது என்ருர் அக்கிழவி. ஆனல், மூதாட்டியின் உயர் கருத்தில் ஒரு திருத்தம் செய்ய வேண்டியது, கால மாற்றத்தாலும், இந்தியப் பேரரசின் பாரபட்ச நடைமுறையாலும் கட்டாயமாகிறது.

மனிதனுகப் பிறந்தாலும் பாகிஸ்தானில் இந்து மத வெறியனுகப் பிறந்திருக்க வேண்டும். பிறந்ததால் ஏற்படும் சிறப்பு முற்றுப்பெற, மேற்கு வங்கத்திற்காவது; கிழக்குப் பாஞ்சாலத்திற்காவது 'அகதி' என்ற பெயரில் குடும்பத்துடன் குடியேறிவிட வேண்டும். அப்பொழுதுதான் அகதியாக மாறின, அப்பெயருக்குரிய மனிதனின் தனிச் சிறப்பு உச்சம் பெறும். இந்தியப் பேரரசின் தத்துப்பிள்ளையாக அம்மனிதன் கொள்ளப்படுவான். கொள்ளப்படுவதுதான் தாமதம்—அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் தண்டச் சோறு! குடியிருக்க வசதி! செலவிற்கு மாத மானியம்! தொழில் நடத்த முதல்! குழந்தை குட்டிகளுக்கு இலவசக் கல்வி! இலவச மருத்துவ உதவி! பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு! அவ்வளவும் அந்த விநாடி முதல் இந்தியப் பேரரசால் வழங்கப்பட்டுவிடும்.

அகதிகள் என்ற பெயரில் உலாவிவரும் மத வெறியர்களுக்கு இந்தியப் பேரரசு இன்னும் எந்தெந்தச் சலுகைகளைக் கூட்டத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறதோ!—யார் கண்டார்கள்?

இந்தியப் பேரரசின் புது மாப்பிள்ளைகளாகவே, இன்று அகதிகள் கருதப்பட்டு வருகின்றனர். செய்யப்படும் வசதிகளும், மறு விருந்து உண்ண முதல் முறையாக மாமியார் வீடு வந்த மாப்பிள்ளைகளுக்குச் செய்யப்படுவது போன்றே, அகதிகளுக்கு இந்தியப் பேரரசால் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வளவு நலன்களையும், தாங்கள் வலியுறுத்தாத நிலையிலும், தாமாக வலிய முன்வந்து செய்கிறதே என்பதினுல் கண்டிப்பாக ஏற்பட்டுத் தீர வேண்டிய அன்பு, இந்தியப் பேரரசிடம் அகதிகளுக்கு இது வரை ஏற்பட்டதாகவும் சொல்வதற்கில்லை—இனி ஏற்படும் என எதிர்பார்ப்பதற்கும் இல்லை. பெண் கொடுத்த பெற்ருேர்களுக்கு மேலும் மேலும் மனப்புண்ணை உண்டாக்கி, மேலும் மேலும் 'அறுவடை' செய்துகொள்ளப் பார்க்கும் சிற்றின மாப்பிள்ளையைப் போலவே, அந்த அகதிகளும் நடந்துகொள்கின்றனர்.

ஒரு மாப்பிள்ளையைப் போன்றே, மற்ற குடி மக்களுக்கு இல்லாத அளவு, இந்தியப் பேரரசிடமிருந்து வசதிகளைப் பெறும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்ற மமதையும் அகதிகளிடம் வேரூன்றி விட்டிருக்கிறது. அகதிகளின் இவ்வாணவப் போக்கை அறிந்தும் அறியாதது போல இந்தியப் பேரரசு நடந்துகொள்ளுகிறது. சொந்த இனப்பற்றும், இரத்தப் பாசமும் தான் இந்தியப் பேரரசின் பிடிவாத குணத்திற்குக் காரணம் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

வடநாட்டு அகதிகள் விஷயத்தில் இவ்வளவு பாசமும் பரிவும் காட்டி, அவர்களை வரவேற்று உபசரிக்கும் இந்தியப் பேரரசு, இலங்கையில் 'நாடற்ற நாடோடி'களாகத் தவித்துக் கொண்டிருக்கும் இந்தியத் தமிழர்கள் விஷயத்தில் அணுவளவு கவலை காட்டவும் மறுத்து வருகிறது. இரத்தமும், இனமும் வெவ்வேருக இருக்கும்பொழுது, வடநாட்டு அகதிகள் விஷயத்தில் நடந்துகொள்வது போன்றே, இலங்கையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இந்தியத் தமிழர்கள் விஷயத்திலும் நடந்து கொள்ளுமென இந்தியப் பேரரசிடம் நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது? உதவிக்குக் காத்துக் கிடக்கும் இரு வகையினர் விஷயத்திலும், இந்தியப் பேரரசு நடந்துகொள்ளும் முறை, மேற்குறிப்பிட்ட நமது கருத்தைத்தான் மெய்ப்பிப்பதாக இருக்கிறது.

பாகிஸ்தான் அகதிகளுக்கு இந்தியப் பேரரசு செய்துவரும் வாழ்க்கை வசதிகள், அகதிகளை குடிமக்கள் வெறுப்பாக நோக்கும் நிலையையே உண்டாக்கி இருக்கிறது. அகதிகளிடம் இயற்கையாக மற்றவர்களுக்கு இரக்கம் ஏற்படுவதற்குப் பதிலாக, எரிச்சலே ஏற்படும் நிலை வளர்ந்து கொண்டு வருகிறது.

வடநாட்டில் குடியேற்றுள்ள பாகிஸ்தான் அகதிகள், அங்கு ஏற்கனவே இடம் பெயராது இருந்துவந்த பிறமக்களிடம் அன்பாக நடந்து கொள்வர் என்பது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். இரத்த பாசமும், இனப்பற்றும், மத வெறியும் அவ்வன்புறவுக்கு அடிப்படைகளாகும்.

ஆனல், தென்னுட்டில் திணிக்கப்பட்டுள்ள அகதிகளுக்கும், இடம் பெயராது இருந்து வரும் உள்ளூர் மக்களுக்கும் அன்பு வளரும் வகையில் ஏற்றகூடிய வளமைகள் எதுவும் கிடையாது. தங்களில் பலர் பிச்சை எடுக்கும்பொழுது, வேலை கிடைக்காமல் பட்டினியாக விதிவிதியாக அலைந்து திரியும்பொழுது, குடியிருக்க இடமின்றி பாதை ஓரங்களிலும் ஒதுக்கிடங்களிலும் புழுக்கள் போல் நெளிந்துகொண்டிருக்கும்பொழுது, இந்தியப் பேரரசின் ஆதரவு பெற்று அகதிகள் வசதியான இடங்களில் இருப்பதையும், பகட்டான ஆடைகள் உடுத்தி உலாவுவதையும், வயிறுபுடைக்கத் தின்றுவிட்டு நெளிவதையும், பற்பலவிதத் தொழில்களில் ஈடுபட்டு சுகவாழ்வு வாழ்வதையும் காணுகின்ற உள்ளூர் மக்கள், என்றென்றும் அலட்சியமாக இருப்பர்—அகதிகளிடம் சாதாரணமாகப் பழகுவர்—எனக் கொள்ள முடியுமா? ஒருக்காலும் முடியாது!

நாமும் அகதிகளாகப் பிறந்திருந்தால், அதிலும் பாகிஸ்தான் அகதிகளாக வடநாட்டுப் பகுதியில் பிறந்திருந்தால், நாமும் திராவிடத்தில் வந்து இன்ப வாழ்வு வாழலாமே என்று, இங்குள்ளோர் எண்ணத்தான் எண்ணுவர். உள்ளூர் மக்கள் விஷயத்தில் இங்கு குடியேறி உள்ள அகதிகள் நடந்து கொள்வது போன்றே, நாமும், அப்பொழுது உள்ளூர் மக்களிடத்தில் ஆளும் வர்க்கத்தினராக அதிகாரமாக நடந்து கொள்ளலாமே என்று எவரும் நினைக்கத்தான் நினைப்பர். இந்நினைப்பு அகதிகள் விஷயத்தில் இந்தியப் பேரரசு காட்டிவரும் பரிவின் உடனடி விளைவேயாகும் எனக் கூறுவது துளியும் மிகையாகாது.

கரேன்கள் கிளர்ச்சி

ஒடுக்குவதில் பர்மா இராணுவம் தீவிரம்

இரங்கூனுக்கு வடகிழக்கில் 120 மைல் தொலைவில் பர்மா—தாய்லாந்து எல்லையிலுள்ள பாப்புன் எனும் நகரத்தை பர்மிய இராணுவம் திரும்பக் கைப்பற்றி விட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது.

இந்த நகரம், கடந்த ஏழாண்டுக் காலமாகக் கரேன் புரட்சிக்காரர்களின் தலைநகரமாக விளங்கி வந்தது. கரேன்களின் 'கடைசிக் கோட்டை' என்று கருதப்பட்டு வந்த இந்த நகரமும் தற்போது வீழ்ந்து விட்டதாம்.

மாணவர்களிடை கட்டுப்பாடு

மத்திய சர்க்கார் திட்டம்

தற்போது மாணவர்களிடையே நிலவிவரும் கட்டுப்பாடில்லாமையைப் போக்குவதற்கென இந்திய சர்க்கார் கல்வி இலாகா விரிவான திட்டமொன்றை வகுத்துள்ளதென்றும், இத்திட்டம், மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டேதான் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், திட்டத்திலுள்ள நடவடிக்கைகள் பண சம்பந்தமுள்ளவையாகவும், பண சம்பந்தமற்றவையாகவும் இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு பரீட்சையில் உதவ...

சகாக்களின் நவீன முயற்சி

50 மாணவர்கள், கம்பு, குச்சி சகிதம் உத்திரப் பிரதேசத்தில் உள்ள ஆசம்சாரி எனும் ஊரில் இருக்கும் டி. ஏ. வி. உயர்நிலைப் பள்ளி பரீட்சை மண்டபத்தில் நுழைந்து, அங்கு ஆங்கிலப் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்களுக்குக் கேள்விகளுக்கான விடைகளைக் கூற ஆரம்பித்தனராம்.

பரீட்சையை மேற்பார்த்துக் கொண்டிருந்தவர்கள், அந்த 50 பேர்களையும் உள்ளே நுழைய விடாது தடுக்க முயன்று தோல்வியுற்றிருக்கின்றனர்.

என்ருலும், போலீசார், அங்கு வந்தபோது கம்புகளுடன் தங்கள் சகாக்களுக்கு விடைகள் சொல்லித் தர வந்த 50 மாணவர்களும் ஓடி விட்டனராம்.

அகதிகளுக்கு வேலை தர 3-புதிய நூற்பு ஆலைகள்

நான்கு ஆலைகளின் கதிர்கள் கூட்டப்படும்

தனி நபர்--இந்தியப் பேரரசு கூட்டுத்தொழில் திட்டம்?

ரூ. 2-கோடி செலவில் ஏற்பாடு!

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகள் என்ற பெயருடன், கல்கத்தாவைச் சுற்றியுள்ள நகர்ப்புறங்களில் வசித்து வருவோருக்கு இலாபகரமான வேலைதரும் நோக்கமுடன், இந்தியப் பேரரசு, அந்த நகர்ப்புறங்களில் ஏழு நடுத்தரத் தொழில்களைத் துவக்கத் திட்டமிட்டுள்ளது என்ற விபரம் வெளியாகியுள்ளது.

புதிதாக மூன்று பருத்தி நூல் நூற்பு ஆலைகள் நிறுவப்படுவதுடன், ஏற்கனவே நிறுவப்பட்டு இயங்கி வரும் ஆலைகளில் கதிர்களை அதிகப்படுத்தி தொழிலை விரிவு படுத்தவும் இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டங்களுக்கு சுமார் ரூ 25 கோடி செலவாகுமென்றும், ஆரம்பத்தில் இத்தொழில்களில் 2,000 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், பின்னர் நாளாவட்டத்தில் 5,000 அகதிகளுக்கு வேலை தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

அசாம் மாநிலத்தில் வாழும் அகதிகளுக்கு தொழில் தருவதற்கு அங்கு ஒரு காகித உற்பத்தி ஆலையை நிறுவுவது பற்றியும் இந்திய அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

உலகப் போருக்கு விதை தூவப்படுகிறதா?

பார்மோசா நெருக்கடி வலுக்கிறது

பார்மோசா பகுதிகளில் கம்யூனிஸ்டுகளின் தாக்குதல் நடைபெறுமானல், அவற்றைச் சமாளிப்பதற்கான திட்டங்களை அமெரிக்கா பூர்த்தி செய்து வருவதாக ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களின் இத்திட்டப்படி இப்பகுதிகளில் அமெரிக்க அணுகுண்டுகளும் சேர்த்துவைக்கப்படும் என்று தெரிகிறது.

கரையோரத் தீவுகளை, அனேகமாக வெகுவிரைவிலேயே மக்கள் சீன தாக்கலாமென்றும் அமெரிக்க இராணுவத் தகவல்களிலிருந்து அறியப்படுகிறது.

மக்கள் சீனவுடன் யுத்தம் தொடுக்க சட்டசபையின் ஆதரவைக் கோருவது, அல்லது இத்தகைய யுத்தம் நடைபெற வேண்டுமென இராணுவத் தலைவர்கள் கூறுவதை எதிர்க்க, சட்டசபையின் ஆதரவைப் பெறுவது எனும் நோக்குடன், அமெரிக்க ஜனதிபதி ஐசனேவர், அமெரிக்க சட்டசபையில் உள்ள தமது ரிபப்ளிக்கன் கட்சித் தலைவர்கள், டெமோகிரடிக் கட்சித் தலைவர்கள் ஆகியோருடன் இவ்வாரத்தில் 'மந்திராலோசனை நடத்தவிருக்கிருர் என்றும், அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

முன்பொருமுறை இந்தோ-சீனவில், டியன்-பியன்-பூ எனும் கோட்டையைக் கம்யூனிஸ்டுகள் தாக்கியபோது ஏற்பட்டிருந்தது போன்ற ஒரு நிலைமையே, அமெரிக்கர்களுக்கு இப்போதும், சீனக் கரையோரத் தீவுகளான குமெவாய், மட்சு ஆகியவற்றை போரில் ஈடுபடுத்துவதா வேண்டாமா என்ற பிரச்சினைக்கு முடிவு காண்பதில் இருந்துவருகிறதாம்.

நால்வர் மாநாடு நடைபெறுமா?

★

முன்வருகிருர்!

"நான்கு வல்லரசுகளின் மாநாட்டை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இப்போது 'சுமூகமான பாதை'யில் திரும்பியிருக்கிறது,"

என்று, பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறியிருக்கிருராம்.

★

'முகம்' திருப்புகிருர்!

"ரஷ்யாவுடன் மாநாடு கூடிப் பேசுவதற்கு மேற்கு வல்லரசு நாடுகள் தயாராக இன்னும் பல மாத காலங்கள் பிடிக்கும்,"

என்று, அமெரிக்க இராஜாங்க மந்திரி டல்லஸ் தெரிவித்திருக்கிருர்.

அந்த மாநாடு பற்றி மேற்கு வல்லரசு நாடுகள் 'ஆலோசித்து'க் கொண்டுதானிருக்கின்றனவே தவிர இன்னும் இறுதியான 'முடிவு'க்கு வரவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

★

பின் நோக்குகிருர்!

"சுதந்திர உலகத்தின் நேச நாடுகள், நால்வர் மாநாடு சம்பந்தமான நடைமுறை, கொள்கை பற்றி ஒரு சம்மதித்த முடிவுக்கு வருமுன், நான்கு வல்லரசுகளின் அதிபர்களும் மாநாடு கூட்டுவது பெரும் தவருனது; அதுவர்களுக்குள்ளோ, அல்லது அயல்நாட்டு அமைச்சர்களிடையேயோ பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது ஆட்சேபத்திற்குரிய ஒன்ருகாது,"

என்று, அமெரிக்க செனேட்டர் வில்லியம் நோலண்ட் என்பவர் வாஷிங்டனில் கூறினர்.

ஆக்க வேலைக்கு அணு சக்தி

ஆராய்ச்சியில் கலந்துகொள்ள பிறநாட்டு மாணவர்களுக்கு அனுமதி

ரஷ்யா பரிசீலிக்கிறதாம்!

அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவது சம்மந்தமாக ரஷ்யாவில் நடக்கும் ஆராய்ச்சிகளில் கலந்துகொள்ள பின்தங்கிக் கிடக்கும் நாடுகளின் பௌதீக மாணவர்களை அனுமதிப்பது பற்றிப் பரிசீலனை செய்ய ரஷ்யா தயாராக இருக்கிறது என்று தெரியவருகிறது.

பின்தங்கிக் கிடக்கிற ஆசிய நாடுகளுக்குப் பொருளாதார உதவியும், தொழில் நுணுக்க உதவியும் அளிக்க ரஷ்யா தயாராக இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இப்பிராந்தியத்தில் தாராள வர்த்தகம் நடைபெறுவதற்கு அமெரிக்கா இடையூறுகள் செய்து வருவதாகவும், சீனமீது வர்த்தக முற்றுகையை நடத்துவதாகவும் ஆசிய தூரக் கிழக்கு பொருளாதாரக் குழுவின் மாநாட்டில் சோவியத் பிரதிநிதியான மென்ஷிகாவ் குறிப்பிட்டிருக்கிருர்.

‘ஈ. எஸ். எல். சி. பரீட்சை ஒழிய வேண்டும்!’

‘ஆதாரக் கல்வி ஒரு ஆகாத திட்டம்’

‘ஆசிரியர் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்’

சென்னை மாநில ஆரம்பப் பள்ளி மானேஜர், ஆசிரியர் மானேஜர் முதல் மாநாட்டில் ஏ. ஆர். சேஷாசலம்

“சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கு ஈ. எஸ். எல். சி. பரீட்சை தேவையில்லை என்பதே ஆசிரியர்கள், மானேஜர்கள் ஆகியோரின் முடிந்த முடிபாகும். அன்றலர்ந்த செந்தாமரைகள் போன்ற சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு—11, 12, 13 என்பன போன்ற வயது படைத்த சிறுவர் சிறுமியர்க்கு—இப்படி ஒரு பரீட்சை அவசியமா? அந்த இளைய குழந்தைகளால் இந்தக் கடினமான பளுவைத் தாங்க முடியுமா? இந்தத் திட்டம் அமுலுக்குவந்த சென்ற 12 ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டிலும் இந்தப் பரீட்சையில் தரப்படுகிற கேள்வித் தாள்கள், இந்தச் சிறு பிள்ளைகளால் விடை எழுத முடியாத வகையிலேயே இருந்து வருகின்றன. இந்தப் பரீட்சை எழுதும் பிள்ளைகளில் மிகப் பலர் ஏழைகள்; எனவே, ஒரு முறை பரீட்சையில் தவறிவிட்டால் மேற்கொண்டு அவர்களால் படிக்க முடிவதில்லை; இந்தப் பரீட்சையை முடிக்காமலிருந்தாலோ அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை; எளிதில் விடை எழுத முடியாத வகையில் அமைந்துள்ள இந்தப் பரீட்சை, ஏழைப் பிள்ளைகளுக்குப் பெரியதோர் தலைவலியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது சிறிதும் மிகையாகாது. எனவே, இந்தப் பரீட்சையை ஒழித்துக்கட்டுவதே மிகவும் நல்லது.

“ஒருக்கால் இந்தப் பரீட்சை இருந்தே தீரவேண்டும் என்று அரசாங்கத்தார் கருதுவதாக இருந்தால், உயர்தர ஆரம்பப்பள்ளிகளுக்கு மட்டும் என்று இல்லாமல், உயர்நிலைப் பள்ளிகள், செகண்டரி பள்ளிகள் ஆகியவற்றில் பயில்கிற பிள்ளைகளுக்கும் இந்தப் பரீட்சை வைக்கப்பட வேண்டும். ஆரம்பப் பள்ளிகளின் எட்டாவது வகுப்பு தாழ்ந்தது என்றும், செகண்டரி பள்ளிகளின் மூன்றாவது படிவம் உயர்ந்தது என்றும் இப்போது உள்ள நிலைமை ஒழிக்கப்பட்டு, எட்டாவது வகுப்பு—மூன்றாவது படிவம்—இரண்டும் ஒன்றுதான் என்கிற நிலைமை ஏற்பட வேண்டுமானால், இரு வகைப் பள்ளிகளில் பயில்பவர்களுக்கும் ஒரேவகைப் பரீட்சை ஏற்படுத்தப்பட வேண்டும்; இருந்தால் இரு சாராருக்கும் அந்தப் பரீட்சை இருக்கட்டும்; இல்லையேல் இரு சாராருக்கும் அது இல்லாமல் போகட்டும்.

“உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் உள்ள 6, 7, 8 வகுப்புகளுக்கும், செகண்டரி பள்ளிகளில் உள்ள 1, 2, 3-வது படிவங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமையை உடனே ஒழித்துக்கட்ட வேண்டியது மிகவும் அவசியம். இப்படி ஒரு வேற்றுமை இருக்கும் காரணத்தால், ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பை முடித்தவர்கள், செகண்டரி பள்ளிகளில் 4-வது படிவத்தில் சேர்த்துக்கொள்ளப்படாமல், ஒன்று அல்லது இரண்டு வகுப்புகள் குறைத்தே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இதனால் படித்த வகுப்புகளிலேயே மீண்டும் ஒருமுறை படித்தாக வேண்டிய நெருக்கடியும், அதனால் வீண் பணச் செலவும், மாணவர்களுக்கு ஏற்படுகிறது. படித்து முடிந்த வகுப்புகளிலேயே மாணவர்களை மீண்டும் படிக்க வைப்பதால் யாருக்கு என்ன நன்மை என்பதுதான் எனக்குப் புரியவில்லை.”

—இவ்வாறு, 27—3—55-ல், சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற சென்னை மாநில ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய திரு. ஏ. ஆர். சேஷாசலம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“இந்த மாநிலத்தில் முதல் முதல் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கியவர்கள், எயிடட் நிர்வாகிகளே ஆவர். மாவட்டக் கழகங்கள், நகரசபைகள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள் இந்தத் துறையில் நுழைவதற்கு முன்னாலேயே—கிழக்கிந்தியக் கம்பெனியார்கள் இந்த நாட்டில் ஆட்சி புரிந்துவந்த அந்தப் பழங்காலத்திலிருந்தே—எயிடட் நிர்வாகிகள்தான் ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர்.

“முன்னாளிலும் சரி — இப்போதும் சரி — மொத்தமுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஏறத்தாழ பாதிப் பள்ளிகளை எயிடட் நிர்வாகிகள்தான் நடத்திவருகின்றனர். கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து இந்த உண்மை தெளிவாக விளங்கும்.—

1950—51:

அரசாங்கம் :	1,224
முனிசிபாலிடி :	970
ஜில்லா போர்டு :	8,051
பஞ்சாயத்துக்கள் :	892
எயிடட் :	9,563
மொத்த பள்ளிகள்	20,700

“அரசாங்கம், முனிசிபாலிடி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு ஆகிய நால்வகை நிர்வாகங்களும் சேர்ந்து மொத்தம் எத்தனை பள்ளிகளை நடத்திவருகின்றனவோ, அதே அளவு பள்ளிகளை எயிடட் நிர்வாகம் மட்டும் நடத்திவருகிறது; எனவே, ஆரம்பக் கல்வி இன்றைய நிலை பெற்றுள்ள வளர்ச்சிக்கு, எயிடட் நிர்வாகம் மிக முக்கியமானதோர் காரணம் என்பதை எவரும் மறுத்துவிட இயலாது.

“நகரசபை, மாவட்டக் கழகம் ஆகிய உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் வகுப்பு ஒன்றிற்கு சராசரி 50—60 பிள்ளைகள் படிக்கிறார்கள்; ஆனால் எயிடட் பள்ளிகளிலோ வகுப்புதோறும் சராசரி 20 பிள்ளைகள்தான் படிக்கிறார்கள். பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் காரணத்தால், எயிடட் பள்ளிகளில், ஆசிரியர்களுக்கும் — மாணவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது; ஒவ்வோர் மாணவரையும் ஆசிரியர் தனித்தனியே கவனிக்கவும் முடிகிறது; அளிக்கப்படும் பயிற்சியும் சிறந்ததாக அமைகிறது.

“இவ்வளவு சிறப்புடனும் செம்மையாகவும் நடைபெற்று வரும் எயிடட் நிர்வாகத்தைக் கலைத்துவிட்டு, எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே நேரடியாக எடுத்து நடத்தவேண்டும் என்று ஒரு சிலர் சென்ற சில ஆண்டுகளாக இயம்பி வருகின்றனர். இப்படிச் செய்வது சிறிதும் இயலாத காரியம் மட்டுமல்ல, அவசியமற்ற மாறுதல் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

“ஆரம்பப் பள்ளிகளில் படிக்க வேண்டிய வயதுடைய பிள்ளைகள், நம் மாநிலத்தில், சுமார் 50 லட்சம் பேர் இருக்கிறார்கள்; இவர்களில் சுமார் 30 லட்சம் பேர்தான் இப்போது பள்ளிக்கூடம் செல்கிறார்கள்; மிச்சமுள்ள 20 லட்சம் பிள்ளைகளுக்கு இனிமேல்தான் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இப்போது படித்து வரும் 30 லட்சம் பிள்ளைகளுக்காக 21,400 பள்ளிகள் இப்போது இருந்து வருகின்றன. பள்ளி ஒன்றிற்கு சுமார் 140 பிள்ளைகள் வீதம் இப்போது படித்து வருகிறார்கள். இதே கணக்குப்படி பார்த்தால், மிச்சமுள்ள 20 லட்சம் பிள்ளைகளுக்காக சுமார் 15,000-பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போது பயின்று வரும் 30 லட்சம் பிள்ளைகளை 94,000 ஆசிரியர்கள் பயிற்றுவித்து வருகிறார்கள். இதே விகிதப்படி பார்த்தால், மிச்சமுள்ள 20 லட்சம் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கப் புதிதாக 60,000 ஆசிரியர்கள் தேவை. 94,000 ஆசிரியர்களைக் கொண்ட 21,400 பள்ளிகளுக்காகஇப்போது சுமார் 5 கோடி ரூபாயை அரசாங்கம் ஆண்டுதோறும் செலவிட்டு வருகிறது. மேலும் 60,000 ஆசிரியர்களைக் கொண்ட 15,000-பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமானால், அவற்றிற்கு ஆண்டுதோறும் மேலும் 3 கோடி ரூபாய் செலவாகும். இப்போதுள்ள எயிடட் நிர்வாகங்களை அப்படியே வைத்துக்கொண்டு, படிப்பறிவின்றி உள்ள பிள்ளைகளுக்குப் படிப்பைச் சொல்லிக் கொடுக்க முனைந்தாலே இவ்வளவு செலவு ஏற்படும். இப்படியின்றி, இந்தப் பணியோடு பணியாக, எயிடட் நிர்வாகத்தில் ஏற்கனவே உள்ள பள்ளிகளையும் அரசாங்கப் பள்ளிகளாக மாற்றத் தொடங்கினால், அதற்கென்று வேறு பல கோடி ரூபாய்கள் செலவாகும். இவ்வளவு பெருஞ் செலவைப் புதிதாக மேற்கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பது வெள்ளிடைமலை. எனவே, எயிடட் பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளாக மாற்றுவது அவசியமற்ற வேலை. இப்போது அரசாங்கத்தார் செய்ய வேண்டியதெல்லாம், புதிதாகப் பல பள்ளிகளை ஏற்படுத்தி, படிக்காமலிருக்கும் பிள்ளைகளை படிக்க வைப்பதுதான். கிடைக்கும் பணத்தையெல்லாம் இந்த அரிய செயலுக்குத்தான் பயன்படுத்த வேண்டுமே தவிர, நிர்வாகத்தை மாற்றும் தேவையற்ற முயற்சியில் அதனைச் செலவிடுவது பெருங் குற்றமேயாகும்.

ஆரம்ப ஆசிரியர்களின் வறுமை நிலையையும் வேதனையையும் விளக்கிவிட்டு மேலும் அவர் கூறியதாவது:—

“இந்த நிலையிலேயே அவர்கள் தொடர்ந்து இருந்தால், அவர்களால் தரப்படும் பயிற்சியின் தரம் குறைந்துவிடும் என்பதில் ஐயப்பாடு ஏது? எனவே, அவர்களுடைய அடிப்படை ஊதியம் உடனடியாக மாதம் 20 ரூபாயாவது உயர்த்தப்பட வேண்டும். அதாவது லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 30; ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ 50; செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ 60 உடனடியாக ஆதாரச் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். இந்த அளவுக்காவது அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்படாவிட்டால், அவர்களுடைய வேதனை தீராது—அந்த வேதனை தீராவிட்டால், மாணவர்கள் பெற்று வருகிற கல்வியின் தரமும் உயராது!

ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பென்ஷன் வழங்க முன்வந்த அரசாங்கத்தைப் பாராட்டிவிட்டு மேலும் குறிப்பிட்டார்:—

“ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தாமல், பென்ஷன் ஏற்பாட்டை மட்டும் செய்துவிடுவதால், ஆசிரியர்களின் இன்றைய நிலைமை எந்தவிதத்திலும் உயர்ந்துவிடாது. ஆசிரியர்கள் வேலையைவிட்டு ஓய்வு பெற்ற பிறகு—அதாவது 60-வது வயதுக்கு அப்புறம்தான் இந்தப் பென்ஷன் கிடைக்கும். ஆனால் அதுவரையில் ஆசிரியர்களின் நிலை என்ன ஆவது? எனவே, உடனடியாக, ஆசிரியர்களின் ஊதியத்தை கணிசமான அளவு உயர்த்துவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். ஊதியத்தை உயர்த்துவதோடு, பென்ஷன் தொகையையும், சம்பளத்தில் கால்பகுதி என்பதை, அரைப்பகுதியாக உயர்த்த வேண்டும்.

“ஆசிரியர்கள் ரிடயர் ஆகும் வயதை 62-ஆக உயர்த்தி சர்க்கார் பிறப்பித்துள்ள தற்காலிக உத்தரவை நிரந்தரமானதாக்க வேண்டும்; அவர்களுக்களிக்கப்படும் பல்வேறு விகித ஊதியங்களின் நிலையை மாற்றி, நிர்வாகம் எதுவாயினும் சரி, ஒரேவிதத் தகுதி இருந்தால் ஒரேவித ஊதிய ஏற்பாட்டை அமுலுக்குக்கொண்டு வர வேண்டும்.

“ஏழைச் சிறுவர்கள், ஆரம்பப் பள்ளிகளில் கட்டணம் செலுத்தாமல் கல்வி பயில சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; இதன் விளைவாக எயிடட் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு மாதந்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் குறைந்து விடுகிறது; பல்வேறு செலவுகளை மாதந்தோறும், எயிடட் நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அரசினர் சலுகை பெற்ற மாணவ மாணவியரின் சம்பளத்திற்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் தருகிறார்கள் செலவோ, மாதா மாதம் செய்து தீரவேண்டியிருக்கிறது. வரவோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறைதான். இந் நிலையில், எயிடட் நிர்வாகிகள், செலவைச் சரிக்கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள்.

“அரசாங்கத்தார் அறிவித்துள்ளபடி, எட்டாவது வகுப்பு வரையில், எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி என்கிற திட்டம் அமுலுக்கு வருகிற அடுத்த ஆண்டு முதல், எயிடட் நிர்வாகிகளுக்கு மாதந்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம் இன்னமும் குறைந்துவிடும்; அவர்களுடைய பண நெருக்கடி இன்னமும் சற்று அதிகமாகிவிடும்; இந்தக் காரணங்களையெல்லாம் முன்னிட்டு, சம்பளச் சலுகைகளுக்காகத் தரவேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை மாதந்தோறும்அளிக்க அரசியலார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

“கல்விச் சீரமைப்பைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய முதல் பிரச்சினை, ஆதாரக் கல்வியாகும். ஆளுக்கு ஒரு விதமாகவும், வேளைக்கு ஒரு வகையாகவும் பேசி வருகிறார்களே தவிர, இன்னது தான் ஆதாரக் கல்வியென்று திட்டவட்டமாகவும், தெள்ளத் தெளிவாகவும் வரையறுத்துக் கூறியவர்கள் இதுவரை யாரும் இல்லை. மாணவர்களின் படிப்புக்காகச்செலவாகும் பணத்தை மாணவர்களே தேடிக்கொள்வது—அதுவும் அப்படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வதுதான் ஆதாரக் கல்வி என்கிறார்கள் ஒரு சிலர். படிப்புக்காக ஆகும் செலவை படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வது என்பது ஒருநாளும் நடக்காத காரியம். இதுவரையில், இந்த மாநிலத்திலும் சரி, வேறு மாநிலங்களிலும் சரி, ஆதாரப் பள்ளிகள் எத்தனையோ தொடங்கப்பட்டிருக்கின்றன. எந்த ஆதாரப் பள்ளியிலாவது, அந்தப் பள்ளிக்கூடத்திற்காகும் செலவு முழுவதையும், அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைகளே, அவர்களுடைய கல்வியின் மூலமாகவே தேடித் தந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? இல்லாத ஊர்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதும், இருக்கும் ஊர்களில் அந்தப் பள்ளிகளின் நிலைமையை உயர்த்துவதும்தான் நம்முடைய முதற்பெரும் கடமைகளாக இருக்க வேண்டுமே தவிர, ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றிக்கொண்டிருக்கும் காரியத்தில் நம்முடைய நேரத்தையோ, நினைப்பையோ செலவிடுவது, தேவையில்லாத செயல் மட்டுமல்ல—தீதான திட்டமும் ஆகும்.

“எட்டாவது வகுப்பில், ஆங்கிலம், மிக உயர்ந்த தன்மையில் போதிக்கப்படுவதால், நான்காவது வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பயிற்சியைத் தொடங்குவது நல்லது. எது எப்படியிருந்தாலும் ஆங்கிலப் பயிற்சியை நாம் விலக்குவது இயலாத செயல். அது உலகப் பொதுமொழியாகிவிட்டது. விஞ்ஞான நூற்கள் அந்த மொழியிலே தான் ஏராளமாக இருக்கின்றன. இன்னமும் நீண்ட காலத்திற்கு இந்தியாவின் பொது வாழ்வில் ஆங்கிலத்திற்கு உயர்ந்ததோர் இடம் இருக்கத்தான் செய்யும். இந்தக் காரணங்களையெல்லாம் முன்வைத்துப் பார்க்கும்போது, நம் மாணவர்கட்கு உயர்தரமான ஆங்கில அறிவு இருக்கவேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது.”

இரயில் போக்குவரத்து

சில மாறுதல்கள்

சென்னை, மார்ச் 29—

வருகிற ஏப்ரல் திங்கள் 1-ந் தேதி முதல் அமுல் நடத்தப்படவிருக்கும் தென் பிராந்திய இரயில்வேக்களின் புதிய கால அட்டவணைப்படி, சென்னை—டில்லி ‘கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ்’ வண்டியின் வேகம் மேலும் அதிகரிக்கப்படுமெனவும், சென்னை—பெஜவாடா பாசஞ்சர் வண்டி விசாகப்பட்டினம் வரையில் நீடிக்கப்படுமெனவும் தெரிகிறது.

சென்னை தாம்பரத்திற்கும்—செங்கற்பட்டுக்குமிடையே அதிக வண்டிகள் விடப்படுமாம்.

அதுபோலவே, ஆல்வாய்—கொச்சிக்கிடையிலும், பெங்களூர் — சிந்தாமணிக்குமிடையிலும் வண்டிகள் அதிகப்படியாக விடப்படுமாம்.

தூத்துக்குடியில் ‘முத்துச் சிப்பிகள் விற்பனை

தற்போது தூத்துக்குடியில் நடைபெறும் முத்துச சிலாபத்தில் (முத்துக் குளிப்பு) இத்திங்கள் 26-ந் தேதி கிடைத்த சிப்பிகளில் 69,000 சிப்பிகள், சர்க்கார் பங்காகக் கிடைத்தன; அவை, சராசரியாக 1,000 சிப்பிகளுக்கு ரூ. 66-வீதமும், குளிப்பாளர் பங்குச் சிப்பிகள் 1 ரூபாய்க்கு 5 முதல் 12-வரையிலும் விற்பனை செய்யப்பட்டன.

‘கோவை முரசு’ ஆசிரியர் மறைவு

‘கோவை முரசு’ பத்திரிகையின் ஆசிரியரும், பகுத்தறிவியக்கப் பணியாளருமான தோழர் எஸ். ஏ. யாணிக்கம் 22—3—55 காலை 8 மணிக்கு மாரடைப்பால், பொள்ளாச்சி செல்வதற்காகச் சென்றவர் கோவை—பொள்ளாச்சி பஸ் நிலையத்திலேயே உயிர் நீத்தார். அவரது உடலை சூலூரில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. மயானத்தில் தோழர் எஸ். என். அருணாசலம் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பலர் அன்னாரது சேவை குறித்துப் பேசினர். அவரை இழந்து வாடும் மனைவி மக்களுக்கு நிதி சேகரித்து உதவும் பொருட்டு குழு ஒன்று நிறுவப்பட்டது. (ந-நி.)

பக்தூனிஸ்தான் பிரச்சினை

மேற்குபாகிஸ்தான் மாநிலத்துடன் சேர்ப்பதற்கு எதிர்ப்பு

ஆப்கன் சர்க்கார் அறிவிப்பு

மேற்கு பாகிஸ்தான் மாகிலத்தில் பக்தூனிஸ்தான் பிரதேசங்களைச் சேர்ப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்குமாறு கராச்சியில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதருக்கு ஆப்கன் பிரதமர் உத்தரவிட்டிருக்கிறாராம்.

இந்த ஆட்சேபனை பலனளிக்காவிடில் தூதுவர் உடன் பாகிஸ்தானைவிட்டு வெளியேறி ஆப்கனிஸ்தானுக்கு வந்துவிட வேண்டும் என்றும் அந்த உத்தரவு கூறுகிறதாகத் தெரிகிறது.

பாக். சர்க்கார், பக்தூனிஸ்தான் பகுதிகளை மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தில் சேர்த்துக் கொள்ள மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் விவேகமற்றவை எனவும், அவை ஆப்கன் சர்க்காருக்கு மிகுந்த கவலையைத் தந்திருப்பதாயும் ஆப்கன் மந்திரி சபையின் அவசரக் கூட்டமொன்றில் கூறப்பட்டதாயும் தெரியவருகிறது'

மந்திரி சபைக் கூட்டத்திற்குப் பின், ஆப்கன் பிரதமர் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், பாக். சர்க்கார் போக்கினைக் கண்டித்திருப்பதுடன், பக்தூனிஸ்தான், பாகிஸ்தானின் ஒரு பகுதி என்று ஆப்கன் சர்க்காரால் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், எனவே, இதை ஒட்டி எழக்கூடிய எந்த ஒரு நெருக்கடியையும் எதிர்நோக்குவதற்கு ஆப்கன் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

★

பாகிஸ்தானுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கராச்சி, மார்ச் 30—

காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தின் முன்பு ஆப்கானியர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்களாம்.

அவர்கள் பாகிஸ்தான் கொடியைப் பிடுங்கி கிழித்தெறியவும் முயன்றனராம்.

இதனையொட்டி, ஆப்கான் போலீசாருக்கும் — ஆர்ப்பாட்டக்காரருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது என்றும், இதன் விளைவாக 12 போலீசாரும், 35 ஆர்ப்பாட்டக்காரர்களும் காயமடைந்தனர் என்றும் தெரிய வருகிறது.

ஆர்ப்பாட்டங்களை ஆப்கன் சர்க்கார் தடை செய்திருப்பதாயும், அமைதிக்கு உலை வைப்பவர்களைப் பார்த்தமாத்திரத்தில் சுடுமாறு போலீசாருக்கு உத்தரவிட்டிருப்பதாயும் காபூல் வானொலி அறிவித்துள்ளதாம்.

அணு இரகசியங்கள் !

புதுடில்லி, மார்ச் 29—

“இந்தியாவுக்கு அணு இரகசியங்களைத் தெரிவிப்பதாக ரஷ்யா சொல்லியதுண்டா”?

என்று டெல்லி மக்கள் சபையில் உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, ‘அப்படியொன்றும் கிடையாது’ என்று பதிலளித்துவிட்டு பிரதமர் நேரு, எந்த ஒரு நாடும் நமக்கு எந்த ஒரு இரகசியத்தையும் வெளியிடும் பிரச்சினையே கிடையாது என்றும், ஆனால் அணுசக்தி விஷயமாகப் பிறநாடுகளுடன் இந்தியா தகவல்கள் மட்டும் பரிமாறிக் கொண்டுள்ளது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ரூ. 60 இலட்சம் எங்கே?

பம்பாய் மாகில கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கத்தில் ரூ. 60 இலட்சத்திற்கு கணக்கு காட்டப்படாமல் இருப்பது பற்றி விசாரிக்க அதிகாரி ஒருவர் புதிதாக நியமனம் பெற்றுள்ளாராம்.

கழகக் கூட்டம்

★

சென்னை

எண் 71, மௌபரிஸ் ரோடு, ஆள்வார்பேட்டை திடலில்

2—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: அலமேலு அப்பாதுரை

பேசுவோர்:

என். வி. நடராசன்

முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

ஏ. கே. சாமி எம்.சி.

இராமநாதபுர மாவட்ட

தி.மு. கழக உறுப்பினர்கட்கு

3—4—55 மாலை 3 மணிக்கு, அருப்புக்கோட்டை தோழர் அ. கு. சி. சிவ. அவர்கள் இல்லத்தில், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கவும், உறுப்பினர்கள் கொண்டுவரும் விஷயங்கள் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

சென்னை 23-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

3—4—55 காலை 10 மணிக்கு; சென்னை, புரசை, எண் 29, அரசப்ப முதலி தெருவில், சென்னை 23-வது வட்ட தி. மு. கழக (புதியதாகத் தேர்ந்தெடுத்த)செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுக் குழு உறுப்பினர்கட்கு

3—4—55 காலை 9 மணிக்கு, கோவை தியாகராயர் படிப்பகத்தில், திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுக் குழுக் கூட்டம், தோழர்கள் என். வி. நடராசன், எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும். அதுபோது மேற்படி தொழிற் சங்கம் குறித்து பல முக்கிய முடிவுகள் செய்யப்படும்.

* * *

வரவேற்பு

3—4—55 காலை 7 மணிக்கு கோவை புகைவண்டி நிலையத்தில், தோழர் என். வி. நடராசன், வெள்ளூர் பிரதிநிதிகள் ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

* * *

பொதுக்கூட்டம்

3—4—55 மாலை 6 மணிக்கு, கோவை, சிங்காநல்லூர் என். ஜி. ஆர். மைதானத்தில் நடைபெறும தோழர் என். வி. நடராசன், மற்றும் பல தோழர்கள் பேசுவா.

சேலம்ஜில்லா ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள யூனியன் 2-வது மாநாடு

3—4—55 காலை 9 மணிக்கு; மேட்டூர் இரயில்வே நிலையம் அருகிலுள்ள கெமிக்கல்ஸ் ஆரம்பப் பள்ளியில் மேற்படி மாநாடு நடைபெறும். தலைவர்: திரு. டாக்டர் எஸ். குருபாதம்; கொடியேற்றுபவர்: திரு கே. சே. நல்லதம்பி; திறப்பாளர்: திரு. கே சொக்கையா (பிள்ளை); பேசுவோர்: திரு. வ கோவிந்தசாமி எம்.எல்.ஏ, திரு. வி. ராமுண்ணி மேனன்.

குறுக்கெழுத்துப் போட்டி

“குறுக்கெழுத்துப் போட்டிகளின் மூலமாக, பம்பாய் மாகில சர்க்காருக்கு ஆண்டொன்றிற்குச் சராசரியாக ரூ. 17,75,000 கிடைத்து வந்தது; ஆனால் அந்தப் போட்டி நிறுவனங்களின் சொந்தக்காரர்கள், தங்கள் தலைமைக் காரியாலயங்களையெல்லாம் பம்பாய் மாகிலத்திலிருந்து வெளிமாகிலங்களில் மாற்றிக் கொண்டதால் சர்க்காரின் வருட வருமானம் ரூ 9,36,000 ஆகக் குறைந்துவிட்டது”

என்ற தகவலை, பம்பாய் சட்டசபையில், மாகில முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் தெரிவித்திருக்கிறார்.

டி. டி. டி. மருந்து உற்பத்தி

புதுடில்லி தொழிற்சாலையில் துவங்கிவிட்டது

கடந்த 1953 நவம்பரில் துவங்கப்பட்ட ‘டி. டி. டி. மருந்து உற்பத்திச்சாலை’ இப்போது உற்பத்தியைத் துவங்கிவிட்டது.

கடந்த 25-ந் தேதியன்று மருந்து உற்பத்தியில் ஈடுபட்ட அத்தொழிற்சாலை, தினம் ஒன்றுக்கு அரை டன் டி. டி. டி. மருந்து உற்பத்தி செய்யுமாம்.

இது சுமார் 51·75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டதாகும்.

வரும் நவம்பர் முதல் முழு உற்பத்தியில் ஈடுபடும்போது, தினம் 2 டன் மருந்து இங்கு தயாராகும் என்று தெரிகிறது.

மலேரியா கொசுக்கள் பரவுவதைத் தடுக்க மத்திய அரசாங்க சுகாதார இலாகா துவங்கியுள்ள இயக்கத்திற்கு உதவுவதற்காக ஏப்ரல் முதல் வாரத்தில் 18 முதல் 20 டன் வரை இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் டி. டி. டி. மருந்தின் முதல் பகுதியை இந்த இந்துஸ்தான் தடுப்பு மருந்து கம்பெனியார் அனுப்பி வைப்பர் என்று தெரிகிறது.

விலை வீழ்ச்சி-சர்க்கார் முயற்சி

போபால் மாகில முதன் மந்திரி டாக்டர் எஸ். டி. சர்மா, “விலைவாசிகள் குறிப்பிட்ட ஒரு குறைந்த பட்ச அளவிற்கும் மேல் வீழுமானால், சர்க்காரே உணவுத் தானியங்களை நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்கும்,” என்று கூறியிருக்கிறார்.

விலைவாசிகள் வீழுவதைத் தடுத்துவிட முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வேலையிழந்த மூன்றுள்கள் இறக்குவோர்

ஆந்திர மாகிலத்தில் மதுவிலக்கின் விளைவாக வேலை இழந்த கள் இறக்குவோருக்கு வேலை தேடித் தருவது பற்றி அரசாங்கம் முதலில் நடவடிக்கை எடுக்கும் என்று ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டி கூறிருக்கிறார்.

மேலும் அவர், நிலமில்லாத ஏழை விவசாயிகட்குப் புறம்போக்கு நிலம் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

எப்ரல் 2: திண்டிவனம்

3: சேலம்-காலை:சிறப்புச் சொற்பொழிவு; மாலை: வேலநத்தம்

6: ஆலத்தம்பாடி-காலை: திருமணம்; மாலை: பொதுக்கூட்டம்

7: கீழ்ப்பெரும்பள்ளம்

10: காலை:வேலூர் தேர்தல் மாலை: கோலார் தங்க வயல் பொதுக் கூட்டம்

புயலுக்குப் பின் அமைதி

சைகோன், மார்ச் 30—

தென் வியட்நாம் தலைநகரான சைகோனில் நேற்றிரவு முழுதும் நடைபெற்ற கடுமையான போருக்குப் பின்னர் இன்று மீண்டும் அமைதி நிலவி வருகிறதாகச் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

சைகோன் நகரை முற்றுகையிடுகின்ற மூன்று மதப் பிரிவுகளைச் சார்ந்த படைகளுக்கும், அதனை எதிர்த்துப் போரிடும் சர்க்கார் படைகளுக்குமிடையே நடைபெற்ற பலத்த சண்டையின் விளைவாக இரு தரப்பினரிலும் சுமார் 15 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 50 பேருக்குமேல் காயம் பட்டனர் என்றும் கூறப்படுகிறது

நேற்று நடைபெற்ற இந்தச் சண்டை பீரங்கி சகிதம் நடைபெற்றதாம். இதன் விளைவாக பல உயிர்கள் பலியானதுடன் பல வீடுகள் இடிந்து தரைமட்டமாயிற்று என்றும், பிரதமர் நகு-தின்-தியமின் வீட்டிலும் குண்டுகள் வீசப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

“பிரதமரின் வீடுகள் ‘சல்லடைக் கண்’களாகத் துளைத்தெடுக்கப்பட்டுவிட்டது” என்று காவோ-டாய் தலைவர் தரப்பிலும், “வீட்டுக்கு அதிகமான சேதம் எதும் கிடையாது” என்று சர்க்கார் தரப்பிலும் கூறப்பட்டுள்ளதாம்!

மின்சார இரயில்கள்

சென்னை தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வரையிலும் மின்சார இரயில்வே போக்குவரத்தை விரிவு படுத்துவது சம்பந்தமான வேலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று முதலமைச்சர் காமராசர், சர்க்கார் காரியாலயத்தில் தம்மைச் சந்தித்துப் பேசிய இரயில்வே குழுத் தலைவர் ஜி பாண்டே, குழு உறுப்பினர் கே. பி. மதுர் ஆகியவரிடம் வற்புறுத்திக் கூறியுள்ளாராம்.

மேலும் அவர், சென்னை—அரக்கோணம் மின்சார இரயில் போக்குவரத்து விரிவு படுத்த வேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்திக் கூறியுள்ளார் என்று தெரிகிறது.

தாம்பரம்—செங்கல்பட்டு மின்சார இரயில் விரிவுபடுத்துவது சம்பந்தமான வேலை விரைவிலேயே ஆரம்பமாகி விடுமென்றும், இது பூர்த்தியானதும் சென்னை—அரக்கோணம்மின்சார இரயில்விரிவாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படுமென்றும், அதற்குள்ளாகவே, இதற்கு அவசியமான மின்சார தளவாடங்களை யெல்லாம் இந்தியவே உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிடுமெனவும் அவர்கள் இருவரும் முதன் மந்திரியிடம் கூறியுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இந்திய சர்க்கார், 1954-55-ம் ஆண்டில், ‘ஷெட்யூல்ட் வகுப்புகள்,’ ‘ஷெட்யூல்ட் குடிகள்,’ இதர பிற்பட்ட வகுப்புகள் ஆகியோருக்கான உபகாரச் சம்பளங்கள் திட்டத்தின் கீழ் ரூ 1 கோடி உபகாரச் சம்பளங்களுக்காக வழங்கியுள்ளது.

அனுரின் பெவான் விலக்கப்படமாட்டார்

தொழிற்கட்சி நிர்வாகக்குழு முடிவு

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் இடதுசாரித் தலைவர் அனுரின் பெவானை கட்சியிலிருந்து விலக்கத் தேவை இல்லை என்று கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானித்திருக்கிறது.

இனி கட்சிக் கட்டுப்பாட்டிற்கு கட்டுப்பட்டு நடப்பதாக பெவான் அளித்த வாக்குறுதியை குழு ஏற்றுக் கொண்டது.

குழுவில் ஆறு பேர்களைத் தவிர இதர பெரும்பான்மை உறுப்பினர்கள் இந்த முடிவை ஏற்றுக் கொண்டனராம்.

பிரிட்டன் சேருகிறது !

ஈராக் - துருக்கி பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ள பிரிட்டன் தீர்மானித்திருப்பதாக வெளிவிவகார இலாகா மந்திரி ஈடன் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறாராம்.

ஐதராபாத் அரண்மனை ‘அடிமை’கள் !

புலன் விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது

ஐதராபாத் மாகில இராஜப் பிரமுகர் நைசாமின் அரண்மனையில் ஏராளமானவர்கள் ‘அடிமை’களாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற புகாரின் மீது நடத்தப்படவிருக்கும் போலீஸ் புலன் விசாரணை, தங்கள் முன்புள்ள ‘ரிவிஷன் மனு’ பைசல் செய்யப்படும் வரையில் நிறுத்திவைக்கப்பட வேண்டும் என ஐதராபாத் உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

சென்னை சுற்றுப்புறம்

தண்ணீர் வசதிக்கான திட்டம்

இப்போது சென்னை நகரசபையின் எல்லைக்குட்பட்டிருக்கும் சைதாப்பேட்டை, அதன் சுற்றுப்புற இடங்கள் ஆகியவற்றில் போதுமான அளவு தண்ணீர் வினியோகம் செய்யப்படுவதற்கென ரூ. 3·38 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்ட திட்டங்களும், மதிப்பீடுகளும் சர்க்காரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

அணுகுண்டின் நீண்டகால விளைவுகள்

சென்ற இரண்டாவது உலகப் போரின்போது, ஹிரோஷிமா நகரின்மீது வீசப்பட்ட அணுகுண்டின் நீண்டகால விளைவுகள் பற்றிய தகவல்கள் சிலவற்றை, அமெரிக்க விசாரணைக் குழுத் தலைவரான டாக்டர் ஹோம்ஸ் என்பவர் வெளியிட்டிருக்கிறார்.

அந்த அணுகுண்டுகளின் விளைவாக சிலர் ‘தற்காலிக மலடு’கள் ஆனதாகவும், குண்டு வீச்சுக்குப் பின்னர் பிறந்த குழந்தைகள் விகாரமடைந்திருந்தாயும், ஆயினும் வருங்கால சந்ததிகளுக்குப் பாதகம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

1955 எப்ரல் 1-ந் தேதியில் இருந்து, சமுதாய அபிருத்தித் திட்டப் பிராந்தியங்களாக மாற்றப்படவிருக்கும் ‘தேசிய விஸ்தரிப்பு சர்விஸ்’ பிராந்தியங்களின் மொத்த எண்ணிக்கை 132 ஆகும்.

******** ***** ************************

தலைமைக் கழகம்—அறிக்கை:

புதுவை — காரைக்கால் கிளைகள்

புதுவை வட்டாரத்தில் அமைக்கப்படும் சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட வேண்டும். மாவட்டப் பிரதிநிதிகளை தெ ஆ. மாவட்டக் கிளைக்கு அனுப்ப வேண்டும்.

காரைக்கால் வட்டாரத்தில் அமைக்கப்படும் கிளைகள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட வேண்டும். அந்தக் கிளைகள் மாவட்டப் பிரதிநிதிகளை தஞ்சை மாவட்டக் கிளைக்கு அனுப்ப வேண்டும்.

“அறிவகம்” சென்னை. 27—3—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

****** *****************************

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.